பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 13 புதன்கிழமை 29.07.2020 கதிர் 262

### இது ரகசியம் அல்ல!

தேர்தல் பிரச்சாரம் என்று வந்தாலே பொய்யும், புளுகும் கட்டவிழ்த்து விடுவதுதான் வேலை என்கிறாகி விட்டது போலும்.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் கண்ணில் பட்ட செய்தி ஒன்றைப் பார்த்தபோது அப்படித்தான் எனக்குத் பக்கம்02




# சர்வதேசத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது இலங்கை!

## திருமலையில் சம்பந்தனுடனான சந்திப்பில் சுவிஸ் தூதுவர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



திருமலை, ஜூலை 29

இலங்கை அரசு, சர்வதேசத்துக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அதனை நிறைவேற்றவே வேண்டும். அந்தப் பொறுப்பிலிருந்து இலங்கை அரசு விலகவே முடியாது.

– இவ்வாறு இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் ஹன்ஸ்பீட்டர் மொக் திட்டவட்டமாகத் தெரிவித்தார். பக்கம் 02

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் இல்லை; திட்டமிடல் குறித்து 10 மாதங்களுக்கு முன் தெரியும்

## – தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் இயக்குநர் தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி நவ்பர் மௌலவி என்ற நபர் என தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் இயக்குநர் நிலாந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட குழுவினருக்குத் பக்கம் 02

## அச்சமின்றி சகலரும் வாக்களிக்கவேண்டும்

### யாழ்.ஆயர் கோரிக்கை



கொரோனா என்ற அச்சமில்லாது பக்கம்02

## சுகாதாரப் பரிசோதகர்கள் வேலைநிறுத்தம் நிறைவு!

கொழும்பு, ஜூலை 29

தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தில் பக்கம் 02

## பிரபல தமிழ் வர்த்தகர் மீது கனடாவில் சூடு!

கனடா – ரொறன்ரோவில் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். பக்கம் 02









## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றியது.

பலரின் கண்களிலும் இந்த 'அற்புதச் செய்தி' படாமல் போனது ஏன் என்று விளங்கவில்லை.

'டான்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'ஸ்பொட் லைட்' என்ற நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசாதான் இந்த விடயத்தைத் திருவாய் மலர்ந்திருக்கின்றார்.

எனக்கு அதனைக் கேட்க – பார்க்க – அதிசயமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. புல்லரித்தது.

*"நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் நானும் தலைவர் சம்பந்தனும் எங்கள் எம்.பி. பதவிகளில் இருந்து விலகி இளைய தலைமுறையினருக்கு வழி விடுவதற்கான தீர்மானம் ஒன்றை விரைவில் எடுக்கவுள்ளோம். இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற தீர்மானம் எடுத்த போதும் பின்னர் சில தவிர்க்க முடியாத காரணங்களால்தான் இருவரும் முடிவை மாற்றித் தேர்தலில் போட்டியிடுமாறு கோரப்பட்டோம்.*

*"இருவரும் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்றுதான் இருந்தோம். ஆனாலும் உடனடியாக நாங்கள் இந்த முடிவை எடுப்பதால் நடைபெறவுள்ள தேர்தலில் அது கட்சிக்குப் பெரும் பாதிப்பாக அமையும் என்று கட்சிப் பிரதிநிதிகளும் மக்களும் எம்மிடம் எடுத்துக் கூறினார்கள். அத்துடன் இந்த முடிவால் கட்சிக்குள் இருக்கும் சிலரால் மத ரீதியான சில நடவடிக்கைகள் வலுப்பெறக்கூடும் என்ற எண்ணப்பாடு எழுந்தது. இதனால் தேர்தல் நேரத்தில் இது கட்சிக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்திவிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டதால் முடிவை மாற்றி இருவரும் போட்டியிடுகின்றோம். ஆனாலும் இந்தத் தேர்தல் வெற்றியின் பின்னர் நாம் இருவரும் எம்.பி. பதவிகளை விட்டுக்கொடுத்து இளம் தலைமுறையினருக்கு சந்தர்ப்பம் வழங்கும் முடிவு ஒன்றை விரைவில் எடுப்போம்....."*

– மாவையின் இந்தப் பேச்சைக் கேட்கும் போது – அந்தப் பேட்டியைப் பார்க்கும் போது – என் கண்களை, காதுகளை என்னாலேயே நம்ப முடியவில்லை.

ஏற்கனவே விடாமல் ஏழு தரம் நாடாளுமன்றுக்குப் போய் ஏழு தீர்வையற்ற பஜரோ பெர்மிட்டுகளை வாங்கி விற்றாயிற்று. இப்போது அவருக்குப் பதவி ஆசை கொஞ்சமும் இல்லையாம். கட்சிக்குப் பெரும் பாதிப்பு வந்து விடும் என்பதால்தானாம் தேர்தலில் நிற்கின்றாராம்.

தேர்தல் முடிவு எப்படி அமையும் என்று குலப்பன் அடிக்கும் போதுதான் இப்படி 'ஞானம்' பிறக்கும் பேச்சுகள் – கருத்துக்கள் – வருகின்றன. வேட்புமனுவுக்கு கயிறு இழுத்தல் போட்டி நடந்த போது, இப்படித் தாங்கள் விலகி இளவதினருக்கு வழிவிடுவது பற்றிய மூச்சே விடவில்லை. இப்போது புதுக்கதையாக அது அவிழ்கின்றது.

தேர்தல் வெற்றிக்குப் பின்னர் எம்.பி. பதவிகளை விட்டுக் கொடுத்து இளம் தலைமுறையினருக்கு சந்தர்ப்பம் வழங்குவாராம்...! நல்ல நகைச்சுவைதான் போங்கள்...!

அந்த விட்டுக் கொடுப்பும் கூட இரண்டும் நியதிகளில்தான் நடக்கும்.

ஒன்று – அடுத்த தெரிவுக்குரிய பஜரோ பெர்மிட் கைக்குக் கிடைத்த பின்னர்.

அல்லது – மாகாண முதலமைச்சர் பதவிக்காக அடுத்த சுற்று கயிறிழுத்தலில் குதிக்கும் போது.

ஆனாலும், தேர்தலில் வென்ற பின்னர் விலகி இளைஞருக்கு விட்டுக் கொடுப்பது என்பது சுத்தக் கப்ஸா. ஏனெனில் விருப்பு வாக்கில் அடுத்த நிலையில் இருப்பவருக்குத் தான் விட்டுக் கொடுத்தால் இடம். வெளியில் இருக்கும் இளைஞர்களுக்கு அல்ல.

வெளியில் இருக்கும் இளைஞர்களுக்க. விட்டுக் கொடுக்கும் தாராளம் உண்மையில் மாவையருக்கு இருக்குமானால் முதலில் அவர் விட்டுக் கொடுக்க வேண்டியது – கட்டிப் பிடித்திருப்பதிலிருந்து அவர் விட்டு விலக வேண்டியது – கட்சித் தலைமைப் பதவியைத்தான். அதுதான் கட்சி ஸ்தாபகர் தந்தை செல்வாவின் முன்மாதிரி. அவர் கட்சித் தலைமையைக் கட்டிப் பிடித்திருந்தவர் அல்லர். தந்தை செல்வாவின் தாராளத்தை மாவையிடம் எதிர்பார்ப்பது நம் முட்டாள் தனம்.

அடுத்தது – இப்படி இந்த எம்.பி பதவியில் இம்முறை தமக்கு ஆசையில்லை, தாம் வென்றாலும் விட்டுக் கொடுப்பார் என்று மாவை சேனாதிராசா முன்கூட்டியே அறிவித்தமை மூலம் ஒரு விடயத்தை 'கிளியர்' பண்ணியிருக்கின்றார்.

தப்பித் தவறி மாவட்டத்தில் எம்.பி பதவி கிட்டாவிட்டால் அதற்காகத் தேசியப் பட்டியல் நியமனத்துக்குத் தாம் போட்டியிட மாட்டார் என்பதுதான் அது.

மாவட்டத்தில் வென்று கிடைக்கக் கூடிய எம்.பி. பதவியிலேயே இம்முறை ஆசை கொள்ளாதவர் – விரும்பம் இல்லாதவர் – அதன் பின் ஏன் தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு ஆசைப்படப் போகின்றார்...?

மாவையின் இந்தப் போக்கைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். 'டான்' தொலைக் காட்சியில் ஒரு காணொலிப் பதிவைப் பெற்று வைத்துக் கொள்ளுங்கள்.

தேர்தலின் பின்னர் தமிழரசுக்குப் புத்துயிரூட்டுவதற்கு அவரின் இப்போதைய இந்தத் தீர்மானம் ரொம்ப, ரொம்ப அவசியமானது...!

–மின்னல்–

---

## ஈஸ்டர் தாக்குதலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தாங்கிய சஹ்ரான் ஹாசீம் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கட்டாரில் 19 வருடங்களாக வசித்த, சர்வதேச தொடர்புகளைப் பேணி வந்த நவ்பர் மௌலவி என்பவரே தாக்குதலின் சூத்திரதாரி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலொன்று இடம்பெறலாம் என்றும், அதற்கான திட்டமிடல் வகுக் கப்படுகின்றமை குறித்தும் பத்து மாதங்களுக்கு முன்னரே புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸிடம் தெரிவித்தேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

## அச்சமின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து மக்களும் வாக்களிக்க வேண்டும் என யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள் என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் எமது வாக்குரிமையைச் சரியாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நீங்கள் உங்களுக்குச் சேவை செய்யக்கூடிய சரியானவர்களை நாடாளுமன்றம் அனுப்ப கட்டாயம் தேர்தலில் பங்குபற்றவேண்டும்.

கொரோனா என்று பயப்படாமல் எங்களுக்குரிய இந்த வாக்களிக்கும் வாய்ப்பைப் பாவித்து உரிமையை நிலைநாட்ட வேண்டும் – என்றார்.

---

## பிரபல தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பிரபல தமிழ் வர்த்தகரான மனோ என்பவர் வீட்டில் இருந்தபோது, அங்கு வந்தவர்களால் சுடப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன.

# 6 வயதுச் சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

ஆறு வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றத்துக்கு இளைஞர் ஒருவருக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

2016ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதிக்கும் 28ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாளில் 6 வயதுச் சிறுமியை அவரது சட்ட பூர்வ பாதுகாவலரான தாயாரிடமிருந்து கடத்திச் சென்றமை மற்றும் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் எதிரியான உவைஸ் முகமெட் ரவீத் என்பவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் குற்றம்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சம்பவம் நடக்கும் போது எதிரிக்கு 19 வயதாகும்.

இந்தக் குற்றப்பத்திரிகை மீதான விளக்கம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் இடம்பெற்று வந்தது.

வழக்குத் தொடுனர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிரந்த் வழக்கை நெறிப்படுத்தினார். எதிரி சார்பில் சட்டத்தரணி ஜெயந்தன் முன்னிலையானார்.

வழக்கில் முதலாவது சாட்சியான பாதிக்கப்பட்ட 9 வயது நிரம்பிய சிறுமி தனது சாட்சியத்தில், அம்மா வைத்தியசாலையில் இருந்தார். அப்போது நான் ஓட்டப்போட்டிக்காக பள்ளிக்குச் சென்றேன். என்னை அயல்வீட்டு மாமா சைக்கிளில் ஏற்றிச் சென்று விடுவதாகத் தெரிவித்தார். அதனால் அவருடன் சென்றேன்.

என்னை பள்ளியில் இறக்காமல் இறைச்சிக் கடைக்கு பக்கதால சென்று பற்றைக்குள் வைத்து துன்புறுத்தினார் என்று தனக்கு நடந்தவற்றை விவரித்தார்.

அத்தோடு தனக்கு நடந்தவற்றை அம்மா வீட்டில் இல்லாதபடியால், அயல் வீட்டில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியையிடம் முதன்முதலில் கூறினார் எனவும் சிறுமி தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

சிறுமியின் சாட்சியத்தை நிரூபிக்கும் வகையில் அவரது தாயார், அயல் வீட்டு ஆசிரியையின் சாட்சியங்கள் அமைந்தன. நிபுணத்துவ சாட்சியத்தில் சட்ட மருத்துவ அதிகாரி, சிறுமி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தினார்.

எதிரி சார்பில் அவரது தந்தை சாட்சியமளித்திருந்தார். அரச சட்டவாதி நாகரட்ணம் நிரந்தின் குறுக்கு விசாரணையில் எதிரி தடுமாறினார்.

இந்த நிலையில் வழக்கின் தீர்ப்பை வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் இன்று நேற்று செவ்வாய்கிழமை வழங்கினார்.

எதிரி மீதான இரண்டு குற்றச்சாட்டுக்களும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் சிறுமியைக் கடத்திச் சென்ற குற்றத்துக்கு 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்தோடு 5 ஆயிரம் ரூபாத் தண்டப்பணம் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியதான இரண்டாவது குற்றத்துக்கு குற்றவாளிக்கு 9 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்தோடு 10 ஆயிரம் ரூபாத் தண்டப் பணம் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

இந்த இரண்டு சிறைத் தண்டனைகளையும் குற்றவாளி ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும். வழங்கத் தவறின் 2 வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் தீர்ப்பளித்தார்.

---

## சர்வதேசத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலைக்கு நேற்று விஜயம் செய்த இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகள் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இதன்போதே சுவிஸ் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், அடிப்படை மனித உரிமைகள் குறித்தும் சம்பந்தனுடன் சுவிஸ் தூதுவர் கலந்துரையாடினார்.

விசேடமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாகவும், தேர்தலின் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இருவரும் கருத்துக்களைப் பரிமாறினார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானங்கள் மற்றும் அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பிலும், புதிய அரசமைப்பு குறித்தும் இருவரும் பேசினார்கள்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக இலங்கைக்கான சுவிஸ் தூதுவர், அவரது அரசியல் செயலாளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடினேன். குறிப்பாக மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் சம்பந்தமாகவும், பொதுத்தேர்தலுக்குப் பின்னர் நிலைமை எவ்வாறாக அமையும் என்பது பற்றியும் சுவிஸ் தூதுவர் தனது கணிப்பை என்னிடம் கூறினார்.

தேர்தலுக்குப் பின்னர் பல கடமைகளை நிறைவேற்றவேண்டிவரும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அரசியல் ரீதியாக எடுக்கப்படவேண்டிய முடிவுகள், புதிய அரசமைப்பு உட்பட பல விடயங்கள் புதிய நாடாளுமன்றம் கூடிய பின்னர் முன்னெடுக்கப்படும் என நான் அவரிடம் தெரிவித்தேன்.

இந்த விடயங்கள் இலகுவாக இருக்காது. மாறாக கடினமாக இருக்கும். இருந்த போதும் ஓர் அரசு, ஒரு நாடு சர்வதேசத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறி அல்லது சர்வதேச சட்டத்தை மீறி, அவர்களால் சர்வதேசத்துக்கு கொடுக்கப் பட்ட வாக்குறுதிகளை மீறி தொடர்ந்தும் செயற்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல. இலங்கை அரசு நீண்ட காலமாகத் தனது ஒப்பந்தங்களை, வாக்குறுதிகளை மீறிச் செயற்பட்டு வந்திருக்கின்றது. அதற்கு முடிவு வரவேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில், நாங்கள் எவரையும் பகைக்க விரும்பவில்லை. அதேநேரம் எமது மக்களது அடிப்படை உரிமைகளில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை. எமது மக்கள் சார்ப்பாக மேற்கொள்ளவேண்டிய கடமைகளை மேற்கொள்வோம். அதேபோன்று எடுக்கவேண்டிய முடிவுகளை எடுக்கவேண்டிய நேரத்தில் எடுப்போம் என்று சுவிஸ் தூதுவரிடம் நான் தெரிவித்தேன்.

இதற்குப் பதிலளித்த அவர், 'இலங்கை அரசு, சர்வதேசத்துக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அதனை நிறைவேற்றவே வேண்டும். அந்தப் பொறுப்பிலிருந்து இலங்கை அரசு விலகவே முடியாது' என்று கூறினார். சந்திப்பு திருப்திகரமாக இருந்தது. நான் சொல்ல வேண்டிய விடயங்கள் அனைத்தையும் அவரிடம் சொல்லிவிட்டேன் – என்றார்.

---

## சுகாதாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த 11 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை நேற்றுக் காலை நிறைவுக்கு வந்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்றுக் காலை இடம்பெற்ற பேச்சின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய தொழிற்சங்க நடவடிக்கையை நிறைவுக்குக் கொண்டு வந்தோம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

(விரிவான செய்தி 4ஆம் பக் கத்தில்...)




# குருநாகல் மேயரை கைதுசெய்யுமாறு அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

## தொல்பொருள் கட்டட ஆவணங்களைக் கையளிக்க உத்தரவு

குருநாகல் மேயரைக் கைதுசெய்யுமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் கருணாரத்ன நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இரண்டாவது புவனேகபாகு மன்னனினால் கட்டப்பட்ட அரச சபை தகர்க்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், குறித்த மேயரைக் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியே இம்மனுவை அவர் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவானது சட்டத்தரணி சுனில் வட்டகல மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் பிரதிவாதிகளாக பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, குருநாகல் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி கபில அதிகாரி, தொல்பொருள் பணிப்பாளர் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க, குருநாகல் மாநகர சபை மேயர் துசார சஞ்சீவ, குருநாகல் மாநகர சபை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1293 - 1302 காலப்பகுதியில் குருநாகல் இராச்சியத்தை ஆண்ட இரண்டாம் புவனேகபாகு மன்னனினால் கட்டப்பட்டது எனக் கூறப்படும் புராதன அரச சபையானது, குருநாகல் நகர மத்தியில் இருந்தது என மனுதாரர் குறித்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தொல்பொருள் மதிப்புடன் குருநாகல் புவனேக ஹோட்டலாக நடத்திச் செல்லப்பட்ட கட்டடத்தை மீண்டும் புனரமைப்புச் செய்வதற்காக சுமார் 90 இலட்சம் ரூபா வரை செலவாகும் என புத்தசாசன, கலாசார மற்றும் மத விவகார அமைச்சு மதிப்பீடு செய்துள்ளது.

இதற்கமைய, அதற்கான குறித்த நிதியை குருநாகல் மாநகர சபை, வடமேல் மாகாண சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றிலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் புத்தசாசன, கலாசார மற்றும் மத விவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்திருந்தார்.

அத்துடன், தகர்க்கப்பட்ட குருநாகல் தொல்பொருள் கட்டடப் பகுதிக்குள் நுழைவதற்கு, குருநாகல் மாநகர சபை மேயர் உள்ளிட்டோருக்கு எதிராக நீதிமன்றத்தால் தடையுத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்டமா அதிபர் விடுத்திருந்த மற்றுமொரு கோரிக்கைக்கு அமைய, குறித்த தொல்பொருள் கட்டடம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு, குருநாகல் நகர சபை மேயருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது எனச் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், நகர அபிவிருத்திக் குழுவின் அனைத்துக் கோப்புகள் மற்றும் குறிப்புகளையும், குருநாகல் நீதிமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் விடுத்த கோரிக்கைக்கு அமைய, வடமேல் மாகாண ஆளுநருக்கு நீதிமன்றம் குறித்த உத்தரவை வழங்கியுள்ளது.

சட்டமா அதிபரின் இணைப்பதிகாரியான அரச சட்டத்தரணி நிரா ஜயரத்ன இதனைத் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனியும் தாக்குப் பிடிக்குமா இலங்கை - இந்திய ஒப்பந்தம்?

ஈழத் தமிழர்களின் வாழ்வியல் போராட்டத்தில் பல எதிர்பாரா திருப்பங்கள் நடந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு திருப்புமுனையின் 33ஆவது நிறைவு தினம் இன்றாகும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் கொழும்பில் இலங்கை – இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இன்றுடன் 33 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

தமிழர் தரப்பில் தமது வாழ்வியல் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்த பல்வேறு ஆயுதப் போராட்ட அமைப்புகளின் ஆயுதப்போராட்டத்தை திடுதிப்பென முடிவுக்குக் கொண்டு வந்த திருப்புமுனை இந்த ஒப்பந்தம்.

ஈழத் தமிழர்களின் விருப்பு – வெறுப்பு அறியப்படாமலேயே – அவர்களின் இணக்கம் பெறப்படாமலேயே – இந்திய வல்லாதிக்கம், கொழும்புடன் சேர்ந்து தமிழர் மீது திணித்த ஓர் ஒப்பந்தமாக அது அமைந்தது.

ராஜீவ் காந்தியின் புதுடில்லி அரசும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கொழும்பு அரசும் மூன்றாம் தரப்பாகிய தமிழரின் இணக்கத்தையோ, சம்மதத்தையோ பொருட்படுத்தாமல் ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் அவசர அவசரமாக திணித்த இந்திய – இலங்கை ஒப்பந்தம் தொடர்பில் இலங்கையின் இரண்டு பெரும் இனங்களான சிங்கவர்கள் மற்றும் தமிழர்களிடையே நேர்மாறான கருத்துகளும் உணர்வு நிலையுமே அப்போது நிலவின.

சிங்களத் தென்னிலங்கையில் இந்திய எதிர்ப்புணர்வு உச்சத்தை எட்டியிருந்தது. இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் அயல் தேசமான இந்தியா தனது வல்லாதிக்க மேலாண்மையைப் பிரயோகித்து, தேவையற்ற தலையீட்டை வலிந்து மேற்கொண்டிருக்கின்றது என்று கருதிய சிங்கள மக்கள் ஒப்பந்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். எதிர்ப்புகளை பல வகைகளிலும் வெளிப்படுத்தினர்.

காலகாலமாக இந்தியாவை ஒரு நேச சக்தியாகவும், பாதுகாவல் நாடாகவும் கருதி வந்த தமிழ் மக்கள், ஒப்பந்தத்தை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுப் படைகளுக்கும் இடையே போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க வந்த இந்திய அமைதிப் படை தமக்குப் பாதுகாப்பையும் அமைதியையும் தரும் என நம்பினார்.

ஆனால் எல்லாம் தலைகீழாக நடந்தன. இலங்கைத் தீவில் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு கிடக்கும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பதற்காகச் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது இலங்கை – இந்திய ஒப்பந்தம். அதற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக இலங்கைத் தீவில் கால் பதித்ததாகக் கூறப்படும் இந்திய அமைதிப்படை, ஈழத்தமிழர்களுக்கு எதிராகவே ஒரு பெரும் கோர யுத்தத்தை ஈழ மண்ணில் அரங்கேற்றியது.

சுமார் இரண்டு வருட கால துன்பியல் நிகழ்வாகத் தொடர்ந்த இந்த யுத்தத்தின் பின்னர் அவமானகரமான பின்னடைவுகளோடு இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து நடையைக் கட்டவேண்டியனவாயின.

ஆனால், அதன் தொடர்பெறுபேறாக அந்த இலங்கை – இந்திய ஒப்பந்தமும், அதற்குச் செயலுரு கொடுப்பதற்காக இலங்கை அரசு செய்து கொண்ட 13ஆவது அரசமைப்புத் திருத்தமும் கொஞ்சம் கொஞ்சமாகச் செயலிழந்து வருகின்றமையையும் அவதானிக்கின்றோம்.

ஈழத் தமிழர்களுக்கான தீர்வு என்ற பெயரில், அவர்களின் சம்மதமோ, விருப்போ பெறப்படாமல் ஒரு தலைப்பட்சமாக இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தம் இன்று உயிர்பிழைக்கச் சேடம் இழுக்கும் மனித உடலம் போலாயிருக்கின்றது.

வயோதிபத்தினால் உடல் சுருங்குவது போல 13ஆவது திருத்த ஏற்பாடுகள், அதிகாரப் பகிர்வுகள் சிங்கள மேலாண்மைவாதத்தின் கெடுபிடிப் போக்கால் சுருங்கி வருகின்றன.

ஒகஸ்ட் 5 தேர்தலின் பின்னர் அமையக் கூடிய பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடம், அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்த 13ஆவது திருத்தத்தை அடியோடு ஒழிக்க கங்கணம் கட்டி நிற்கும் என்பது தெளிவு.

அச்சமயம் 13ஆவது திருத்தத்துக்கு நிரந்தரச் சாவு வருவது தவிர்க்க முடியாததாகும். தான் இலங்கையுடன் செய்து கொண்ட சர்வதேச ஒப்பந்தத்தின் பெறுபேறான அந்த அரசமைப்புத் திருத்தம் அழிவதைப் பார்த்திப்பதைத் தவிர பாரதம் வேறு ஏதும் செய்யாது என்பதும் உறுதியானதுதான்...!

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் நிறைவு!



தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த 11 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை நேற்றுக் காலை நிறைவுக்கு வந்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்றுக் காலை இடம்பெற்ற பேச்சின்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய தொழிற்சங்க நடவடிக்கையை நிறைவுக்குக் கொண்டு வந்தோம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

1897ஆம் இலக்க நோய்த் தொற்றாளர்களைத் தனிமைப்படுத்துவதற்கான மற்றும் தொற்று நோய் கட்டுப்படுத்தலுக்கான கட்டளைச் சட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த 16 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை 11 நாள்கள் நாடளாவிய ரீதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்தக் காலப்பகுதியில் சுகாதார அமைச்சர், அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்டோருடன் பேச்சுகள் இடம்பெற்றன. எனினும், அந்தப் பேச்சுகளின் போது எமக்கான உரிய தீர்வு வழங்கப்படாமையால் தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியேற்பட்டது.

இந்நிலையில் கடந்த 25 ஆம் திகதி சட்டமா அதிபர் இது தொடர்பில் தெளிவான பதிலொன்றை சுகாதார அமைச்சுக்கு வழங்கியிருந்தார். பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குக் காணப்படும் அதிகாரங்களைச் சுற்றுநிருபமாக வெளியிடுவது சட்டத்துக்கு முரணானதாகும் என்று சட்டமா அதிபர் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் இந்தப் பிரச்சினை தொடர்வதால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினையைக் கருத்தில்கொண்டு பிரதமருடனான பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் தெளிவுபடுத்தலுக்கு அமைய 1897ஆம் இலக்க நோய்த் தொற்றாளர்களை தனிமைப்படுத்துவதற்கான மற்றும் தொற்று நோய் கட்டுப்படுத்தலுக்கான கட்டளைச் சட்டத்தின் 38 ஆவது உறுப்புரைக்கமைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு பரிசோதகர்கள் என்ற ரீதியில் அதிகாரங்கள் காணப்படுகின்றன என்று கூறப்பட்டது.

அதற்கமைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வேண்டிய இடங்களுக்குச் செல்லுதல், சட்ட மீறல் இடம்பெறும்போது அதில் தலையிடுதல் உள்ளிட்ட அதிகாரங்கள் காணப்படுகின்றன என்று சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேச்சில் கலந்துகொண்ட அதிகாரி தெளிவுபடுத்தினார்.

அதன்பிரகாரம் பரிசோதகர்களாக எமக்குக் காணப்படும் அதிகாரங்களுக்கு ஏற்பச் செயற்பட முடியும் என்பதால் தொற்று நோய்க் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளில் நாம் தொடர்ச்சியாக ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

இந்தக் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏதேனுமொரு வழக்குத் தொடரப்பட்டால் அது தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கும் (எம்.ஓ.எச்.) மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய செயற்படுவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

கட்டளைச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எமது கடமைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க இணக்கம் காணப்பட்டது – என்றார்.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க கருத்துத் தெரிவிக்கையில் –

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தொழிற்சங்க நடவடிக்கை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பேச்சு நடைபெற்றது. தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது வழக்குத் தொடரப்பட்டால் சுகாதார மருத்துவ அதிகாரிகள் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்றும், அதில் இரு தரப்புக்கும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் எனது ஆலோசனையின் பேரில் செயற்படுவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இந்தத் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டம் மிகப் பழமையானது என்பதால் அதில் திருத்தங்கள் அல்லது மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது – என்றார்.

# போதைப்பொருள்களுக்கு முடிவுகட்ட மின்னஞ்சல், தொலைநகல் அறிமுகம்

போதைப்பொருட்கள், குற்றச்செயல் கும்பல்களின் உறுப்பினர்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக, மின்னஞ்சல் முகவரியும் தொலைநகல் இலக்கமும் பொலிஸ் தலைமையகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான தகவல்களைப் பொது மக்கள் வழங்குவதற்காக 1997, 1917 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே, மின்னஞ்சல் முகவரியும் தொலைநகல் இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, போதைப்பொருள்கள் தொடர்பான தகவல்களை 1997police.lk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக வழங்க முடியும். குற்றச்செயல் கும்பல் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்களை 1917police.lk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக வழங்க முடியும்.

அத்தோடு, 011 2440 440 எனும் தொலைநகல் இலக்கம் ஊடாகவும் பொது மக்கள் தகவல்களை வழங்க முடியும் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# சரியான நேரம் கூட்டமைப்பை புலிகள் கட்டாயம் கையேற்பர்!

## ஜனநாயகப் போராளிகள் அறிவிப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 28

சரியானதொரு காலம் வரும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலி உறுப்பினர்கள் பொறுப்பேற்பார்கள். அதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். அதுவரைக்கும், அதற்குப் பின்னரும், தமிழ்க் தேசியக் கூட்டமைப்பு பலமடைய வேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் இன்று இடம்பெற்ற ஊடகவியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்கள் இன்று தமது தனித்துவத்தை இழந்து, பயணித்துக்கொண்டிருக்கின்றோம். தற்போது வந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ அரசு, தமிழர்களுக்கு ஆற்றியிருக்கின்ற பணிகளின் நிமித்தம், தமிழர்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தரவேண்டிய கடப்பாடு கோட்டாபய அரசுக்கு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்க மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்குவதற்குச் சிங்கள தேசம் நினைத்துள்ளது. அதன்பிரகாரம் தான், முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் வெளியில் வந்து நிற்கின்றார்.

தொடர்ந்தும் தமிழர்கள் தோல்வியடைய முடியாது. நீங்கள் மிகக் கவனமாக முடிவெடுங்கள். நாங்கள் இந்த மண்ணுக்காக போராடியவர்கள். ஒற்றுமையாக வாக்களியுங்கள்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகரசபைகளை மக்கள் ஆணையாக வழங்கியிருந்தார்கள். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் வெல்லமாட்டீர்கள். உங்களை நம்பி உங்கள் பின்னால் உள்ள இளைஞர்களுக்கு நாங்கள் இந்தகருத்தைச் சொல்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் கோட்டாபய மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இருக்கப் போகின்றனர். சில சமயம் நீங்கள் வெற்றிபெற்றால், உங்களின் கதிரையை வெளியில் கொண்டு வந்தா போட்டு விட்டு இருக்கப் போகின்றீர்கள்?

தயவு செய்து மக்களின் வாக்குப் பலத்தை திசை திருப்பும் வேலையை நீங்கள் செய்ய வேண்டாம். கடந்த காலங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு வழங்கப்பட்ட பணி என்ன?

வெள்ளைக்கொடி விவகாரம் பற்றி இன்று வெளியில் வந்து விடுதலைப் புலிகள் உங்களுடன் இருந்ததாகச் சொல்கின்றீர்கள். நீங்கள் எவற்றைக் கதைத்தீர்கள் என்பது எமக்குத் தெரியும். நாங்கள் உங்களுடன் என்னத்தைக் கதைத்தோம் என்று உங்களுக்கும் தெரியும். நாங்கள் உங்களுடன் கதைத் திருக்கின்றோம் என்றால், நாங்கள் யுத்தத்தின் இறுதியில் சம்பந்தனுடன் கதைத் திருக்கமாட்டோம் என்று எவ்வாறு சொல்கின்றீர்கள். யுத்தம் முடிவடைந்து விட்டது. விடுதலைப் புலிகள் சார்பாக நாங்கள் அதைச் சொல்கின்றோம்.

தமிழர்கள் தனித்துவமான இனம். தமிழர்களுக்கு யார் தலைவராவது என்பதே இங்குள்ள பிரச்சினை. தலைவர் பிரபாகரனின் பின்னர், யார் அந்த முடியைச் சூடுவது என்பதே இங்குள்ள பிரச் சினை. ஒரு வருடத்தின் பின்னர், கஜேந் திரகுமார் நான்தான் தலைவர் என்று தனது தலையைக் காட்டினார். அதற்கும் தகுதி வேண்டும். தலைவர் ஆக வேண்டுமாயின், தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக் கும்போது, தலைவர் கஜேந்திரகுமாரை தலைவர் ஆக்கியிருப்பார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அடுத்ததாக நீதியரசராக இருந்த ஒரு மனிதரை நம்பிக்கொண்டு வந்தார். அவர் அப்போதுதான், யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அதற்கு முன்னர் கோவில் கும்பிட வந்து போன ஒருவர்தான் சி.வி.விக்னேஸ்வரன்.

தம்பி பிரபாகரன் என்றே சொல்வார் சி.வி.விக்னேஸ்வரன், தலைவர் பிரபாகரன் என்று சொல்லமாட்டார். கஜேந்திரகுமார் மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் இருவரும் ஒரு நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றார்கள். யார் தலைவர் ஆகுவதென்று ஒரு போட்டி காணப்படுகின்றது.

தலைவர் ஆகுவதற்கு சில தகுதிகள் உள்ளன. சரியானதொரு காலம் வரும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலி உறுப்பினர்கள் பெற்றுக்கொள்வார்கள். அதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். அதுவரைக்கும், அதற்குப் பின்னரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமடைய வேண்டும் - என்றார்.

# யாழில் ஒருவருக்கு தொற்று

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.போதனா வைத்தியாலையில் கடந்த 25ஆம் திகதி 2ஆவது தடவையாக அனுமதிக்கப்பட்டு 7ஆம் இலக்க விடுதியில் தனிமைப்படுத்தல் அறையில் வைக்கப்பட்டிருந்த வருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

எனினும் அவருக்கு குறைந்தளவு தொற்றே ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் அவருடன் பழகிய வைத்தியசாலை ஊழியர்கள் 4 பேர் அடையாளம் காணப்பட்டு அவர்களுடைய வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு 31ஆம் திகதி பரிசோதனை நடத் தப்படும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். போதனா வைத் தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி.

இன்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில் –

கடந்த 7ஆம் திகதி சவுதி அரேபியா வில் இருந்து வந்த 208 பேருடன் தங்கியிருந்தவர் 22ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அன்றைய தினம் மாலையே 7ஆம் விடுதியில் உள்ள தனிமைப்படுத்தல் அறைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை வழங்கப்பட்டு மீண்டும் விடத்தல்பளை தனி மைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். மீண்டும் 25 ஆம் திகதி சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். இதற்கமைய நேற்று மாலை நடத்தப்பட்ட பீ.சி.ஆர். பரி சோதனையில் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனினும் அவருக்கு தொற்று குறைந்தளவிலேயே உள்ளது. இதற்க மைய யாழ்.போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர்கள் குழு கூடி ஆழமாக இந்த விடயத்தை ஆராய்ந்துள்ள துடன், இந்த நபர் வைத்தியசாலையில் தங்கியிருந்த காலப்பகுதியில் வேறு யாருடனும் நேரடியாக தொடர்புகளை பேணினாரா என்பதை ஆராய்ந்துள்ளோம். இதற்கமைய அந்த நபர் தங்கியிருந்த விடுதியிலும், தனிமைப்படுத்தல் விடுதியிலும் பணியாற்றிய 4 உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படுவதற்கான குறைந்தளவு சந்தர்ப்பம் உள்ளதென்ற அடிப்படையில் அவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பாசோதனைகள் எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளன.

வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் பாதுகாப்பு அங்கிகள், முககவசங்கள் பயன்படுத்தப்பட்டே அந்த நபர் பரிசோதிக்கப்பட்டுள்ளார். இதே போல் தனி மைப்படுத்தல் நிலையத்திலிருந்து வந்தவர் என்ற அடிப்படையில் கையுறை, முககவசம் அணிந்துள்ளதுடன், சமூக இடைவெளியையும் பேணியிருக்கின்றனர். ஆகவே யாழ்.போதனா வைத்திசாலையில் உள்ள மற்ற வர்களுக்கோ, ஊழியாகளுக்கோ தொற்று ஏற்பட வாய்ப்பு இல்லை. எனினும் இந்த நோய் பரவும் வேகம் தீவிரமானது என்பதால் நாம் மிக அவதானமாக உள்ளோம் – என்றார்.

# படகு கவிழ்ந்து மீனவர் மாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பரப்பில் மீன்பிடிப் படகு ஒன்று கவிழ்ந்ததில் தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களில் ஒருவர் பத்திரமாக மீட்கப்பட்டார். மற்றொருவரைக் காணவில்லை. அவரைத் தேடும் பணியில் கடற்படையினர், மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வடராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பரப்பில் இன்று அதிகாலை படகு ஒன்றில் இரண்டு மீனர்கள் தொழிலுக்குச் சென்றனர். கடலில் ஏற்பட்ட பலத்த காற்றினால் அவர்கள் சென்ற படகு கவிழ்ந்துள்ளது. இதனால் கடலில் தந்தளித்த அவர்களை மீட்க மீனவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் ஒருவர் பத்திரமாக மீட்கப்பட்டார். அவர் கரைக்கு கொண்டுவரப்பட்டார். கவிழ்ந்த படகும் கரைக்கு கொண்டுவரப்பட்டது. மற்றைய மீனவர் காணாமற்போயுள்ள நிலையில் அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# கெலிஓயா விபத்தில் மூவர் சாவு

கொழும்பு, ஜூலை 28

பேராதனை - கம்பளை வீதியின் கெலிஓயா பகுதியில் இடம் பெற்ற விபத்தில் தம்பதியினர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெலம்பொடை பகுதியைச் சேர்ந்த தம்பதியினரும் கெலிஓயா வைச் சேர்ந்த 54 வயதான ஒரு வரும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கெலிஓயா நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் ஒன்றுடன் மோதுண்ட பாதசாரி, பின்னால் வந்த ஓட்டோவிலும் மோதி விபத்துக்குள்ளாகினார். இதனைத் தொடர்ந்து, அந்த ஓட்டோ வீதியில் நிறுத்தப்பட்டிருந்த காருடன் மோதிக் குடை சாய்ந்தது.இந்த விபத்தில், மோட்டார் சைக்கிள் ஓட்டி, பாதசாரி மற்றும் ஓட்டோவில் பயணித்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு ஓட்டோவில் பயணித்த இருவரும் பாதசாரியும் உயிரிழந்துள்ளனர்.

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஜூலை 28

வவுனியா – பறண்நட்டகல் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து இன்று ஓமந்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், ஓமந்தையில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற டிப்பர் வாக னமும் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில், அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தங்கராஜா பால்ராஜ் (வயது –60) என்பவரே உயிரிழந்தார்.

இந்த விபத்தில் கட்டுப்பாட்டை இழுந்த டிப்பர் வாகனம் குடை சாய்ந்துள்ளது. அதன் சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

**இலங்கையில் இந்தியத் தலையீட்டின் நேரடி அங்கமாக கட்டவிழ்ந்தது இலங்கை - இந்திய ஒப்பந்தம். இது போன்ற ஒரு ஜூலை 29இல்தான் அது கைச்சாத்தானது. அது கைச்சாத்தாகி இன்றுடன் 33 ஆண்டுகள் கடந்து விட்டன. அது தொடர்பில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தனது 'போரும் சமாதானமும்' என்ற நூலில் 'இலங்கையில் இந்தியத் தலையீடு' என்ற தலைப்பில் எழுதிய கருத்துகளின் ஒரு பகுதி இன்று இங்கு பிரசுரமாகின்றது. (ஆ - ர்)**

# இலங்கையில் தோல்வி கண்ட இந்தியாவின் தலையீடு



இலங்கையில் இந்தியாவின் தலையீடு தோல்வி கண்டதன் பிரதான காரணம் பாரதப் பிரதமர் ரஜீவ் காந்தியும் அவரது ஆலோசகர்களும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் நம்பிக்கைத்துரோகம் இழைக்கும் நயவஞ்சகக் குணவியல்பைச் சரியாக எடைபோடத் தவறியதுதான்.

தமிழீழ மக்களின் கோரிக்கைகளுக்கு ஒரு நியாயமான தீர்வு வழங்கி, இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நேர்மையோ அன்றி அரசியல் உறுதிப்பாடோ அவரிடம் இருக்கவில்லை.

சாராம்சத்தில் ஜெயவர்த்தனா ஒரு கடும்போக்கான சிங்களத் தேசியவாதியாவார். ஆழமான சிங்கள மேலாண்மைவாதப் போக்குடையவர். பெரும்பான்மைச் சிங்களவரின் நலன்களைப் பேணுவதில் மிகவும் நாட்டம் கொண்டவர். தனது நீண்ட அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, அவர்களது அரசியல் சுதந்திரங்களைப் பறித்து, அவர்களது உரிமைப் போராட்டங்களை நசுக்கி, சிங்கள மேலாண்மைவாதத்தின் பிதாமகராக விளங்கினார் ஜெயவர்த்தனா. இந்திரா காந்தி அம்மையாரை இவரால் ஏமாற்ற முடியவில்லை. இவரது பௌத்த சீல மூகமூடிக்குப் பின்னால் ஒளிந்திருந்த இனவாத முகத்தை திருமதி காந்தி எப்பொழுதோ இனங்கண்டு கொண்டார். அரசியல் முதிர்ச்சியற்ற இளைஞரான ரஜீவ் காந்தி இவரது சாணக்கியப் பொறிக்குள் சறுக்கி விழுந்தார்.



Mr J.N. Dixit with the LTTE Supremo Pirabakaran and Maj. Gen. Harkirat Singh, GOC IPKF after the conference on 26 September 1987.

ரஜீவ் காந்தியின் நிர்வாகப் பீடத்துடன் ஒரு வித்தியாசமான இராஜதந்திர அணுகுமுறையைக் கையாண்டார் ஜெயவர்த்தனா. ரஜீவ் அரசுடன் தனது சுயரூபத்தை வெளிக்காட்டி, முரண்பட்டு மோதுவதை அவர் தவிர்த்துக் கொண்டார். தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை செயற்படுத்துவதிலும் தனக்கு உண்மையான, நேர்மையான அக்கறையும் உறுதிப்பாடும் உண்டு என நயவஞ்சகமாக நடித்து இந்தியத் தலைவர்களை நம்ப வைத்தார் ஜெயவர்த்தனா. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கம் செய்வதிலும் மற்றும் முக்கிய விவகாரங்களிலும் ஜெயவர்த்தனாவுடன் நெருங்கிப் பழகி உறவாடிய திரு. டிக்சிட், அவரைப் பற்றி குறிப்பிடுகையில், இந்திய அரசாங்கத்தின் உதவியோடு தமிழருடன் ஒரு நியாயமான இணக்கப்பாடு காண்பதில் ஜெயவர்த்தனாவிடம் நேர்மையும் அரசியல் உறுதிப்பாடும் இருக்கிறது என நான் மிகையாக மதிப்பீடு செய்துள்ளேன். என்கிறார். தமிழரின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் ஜெயவர்த்தனா மீது மிகையாக நம்பிக்கை வைத்து இந்திய அரசு செயற்பட்ட பொழுதும், ஜெயவர்த்தனா பொறுத்த கட்டத்தில் தனது ஏமாற்று வித்தையைக் காண்பிக்கத் தவறவில்லை. வடகிழக்கு மாகாண சபைக்கு அரசியல் அதிகாரம் வழங்க மறுத்து, இந்திய - இலங்கை ஒப்பந்தக் கடப்பாடுகளை அப் பட்டமாக மீறினார் அவர். ஜெயவர்த்தனாவின் இந்த நம்பிக்கைத் துரோகத்தினால் இந்திய இராஜதந்திரம் மாபெரும் பின்னடைவைச் சந்தித்தது.

> தமிழரின் இனப் பிரச்சினையை செம்மையாகக் கையாளத் தவறியதும் இலங்கையில் இந்தியத் தலையீட்டின் தோல்விக்கு ஒரு முக்கிய காரணமாகும். தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை இந்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவர் பிரபாகரனையும் சரி வர எடைபோடத் தவறியது. எத்தகைய துன்பங் கள், இடர்பாடுகள் மத்தியிலும் தனது மக்களின் அரசியல் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் அபாரமான துணிச்சலும் உறுதிப்பாடும் பிரபாகரனுக்கு உண்டென்பதை இந்திய அரசியல் தலைமை உணர்ந்து கொள்ளவில்லை. பிரபாகரனின் அபூர்வமான ஆளுமையை இந்தியா மிகக் குறைவாக மதிப்பீடு செய்திருந்தது.

தமிழரின் இனப் பிரச்சினையை செம்மையாகக் கையாளத் தவறியதும் இலங்கையில் இந்தியத் தலையீட்டின் தோல்விக்கு ஒரு முக்கிய காரணமாகும். தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை இந்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவர் பிரபாகரனையும் சரிவர எடைபோடத் தவறியது. எத்தகைய துன்பங்கள், இடர்பாடுகள் மத்தியிலும் தனது மக்களின் அரசியல் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் அபாரமான துணிச்சலும் உறுதிப்பாடும் பிரபாகரனுக்கு உண்டென்பதை இந்திய அரசியல் தலைமை உணர்ந்து கொள்ளவில்லை. பிரபாகரனின் அபூர்வமான ஆளுமையை இந்தியா மிகக் குறைவாக மதிப்பீடு செய்திருந்தது. இத் தவறான மதிப்பீடு காரணமாகவே தமிழ் நாட்டில் அவர் வாழ்ந்த போது அவர் மீது அழுத்தங்களைப் பிரயோகித்துக் கெடுபிடிகளைச் செய்தது. தமிழீழத்திலும் கொன்றொழிக்கப் பகீரத முயற்சிகளை எடுத்தது. ஆயினும் சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்து வெற்றி கண்டார் பிரபாகரன். இந்திய - இலங்கை ஒப்பந்த கால பிரபாகரனை மிகவும் கண்டித்து மதிப்பாய்வு செய்த இந்தியத் தூதுவர் டிக்சிட், பின்னர் பிரபாகரனின் இலட்சிய உறுதிப்பாட்டை பாராட்டத் தவறவில்லை . புலிகளின் தலைவர் பற்றி திரு. டிக்சிட் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்:



கொழும்பில் நான் பணியாற்றிய நான்கு ஆண்டு காலத்தில் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்கள் அனைவரையும் நான் சந்தித்திருக்கிறேன். இயல்பாகவே இவர்கள் அனைவரையும் விட பிரபாகரன் மேன்மையானவராக, வித்தியாசமானவராகவே தென்பட்டார். இந்த இளைஞர் மீது நான் குறைபாடுகள் கண்டு தப்பபிப்பிராயம் கொண்டு இருந்தபோதும், இவரது ஆழமான இலட்சியப் பற்றையும் அரசியல், இராணுவத் திறனாற்றல்களையும் நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர், நிறைவான அரசியல் சாணக்கியமும், போரியல் மதிநுட்பமும் படைத்தவர் என்பதைப் பல்லாண்டு காலமான நிகழ்வுகள் நிரூபித்துக் காட்டுகின்றன. நீடித்து நின்று, உறுதி தளராது, போராடும் ஆற்றல் இவரது சிறப்பான பண்பியல்புகளுக்கு மேலும் வலுச் சேர்க்கின்றது. இந்திய அமைதிப் படைகளின் போருக்குத் தாக்குப் பிடித்து தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்து வருவதனால் இவர் மக்களின் வீர நாயகனாக மதிப்பைப் பெற்றார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கையில் இந்தியத் தலையீடு பற்றி எழுதிய வரலாற்று ஆய்வு நூலில், ஜெயவர்த்தனாவைத் தான் மிகைப்படுத்தி மதிப்பீடு செய்துள்ளதை ஒப்புக் கொள்கிறார் டிக்சிட். ஜெயவர்த்தனா மீது அபார நம்பிக்கை வைத்திருந்த இந்தியத் தலைவர்கள் பிரபாகரனை மிகவும் குறைவாக மதிப்பிட்டனர். இது பற்றி திரு. டிக்சிட் தனது நூலில் எழுதும் பொழுது, தமிழீழ இலட்சியத்தில் பிரபாகரனிடமிருந்த தணியாத வேட்கை, தீராத வெறி, அவரது போர்த் தந்திரோபாய மதிநுட்பம், பேரிடர்களைத் தாங்கும் அவரது மனவுறுதி ஆகியன பற்றிக் குறைவாக மதிப்பீடு செய்தமையே இந்தியா செய்த மாபெரும் தப்புக்கணக்காகும்" எனக் குறிப்பிட்டார்.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ராஜபக்ஷக்களிடம் மீண்டும் நாடு சென்றால் குழிதோண்டிப் புதைக்கப்படும் ஜனநாயகம்!



## பரப்புரைக் கூட்டத்தில் ராஜித எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 29

ராஜபக்ஷ குடும்பத்திடம் மீண்டும் நாட்டை ஒப்படைத்தால் அதன் பின்னர் ஜனநாயகத்தை மீட்டெடுப்பது இயலாத விடயமாகி விடும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

மஹிந்த ராஜபக்ஷவும் அவரது மனைவியும் காப்பாற்றப்படுவதற்கு முன்னாள் பிரதமரான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம்.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவேன் என முன்னாள் மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்திருந்தார். அதற்கமைய அவர் செயற்பட்டுள்ளார்.

குற்றவாளிகளைக் காப்பாற்றியதில் நல்லாட்சியின் இரு பிரதான தலைவர்களுக்கும் தொடர்புள்ளது.

நல்லாட்சியை ஆரம்பிப்பதில் முக்கிய பங்கு வகித்த தலைவர்கள் அவர்கள் இறுதியில் நல்லாட்சியை அழித்துவிட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மீண்டும் ராஜபக்ஷ தரப்பினரிடம் சென்று எம்மை அழித்ததை மன்னிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது - என்றார்.

# போலிக் கடன் திட்டத்தால் பாரிய மோசடி நடவடிக்கை

## வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களே அதிகம் பாதிப்பு என்று பொலிஸார் தரப்பில் தெரிவிப்பு

இணையம் ஊடாக போலிக் கடன் திட்டம் ஒன்றைப் பிரசாரப்படுத்தி, வெளிநாட்டில் வேலை செய்வோருக்கு சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்குவதாக கூறி, அவர்களின் உள்நாட்டு வங்கிக் கணக்கு விவரங்களைப் பெற்று முன்னெடுக்கப்பட்டு வந்த பாரிய மோசடி நடவடிக்கையைக் கிருலப்பனைப் பொலிஸார் வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் ஐந்து பேரைக் கைது செய்துள்ள பொலிஸார், அவர்கள் முன்னெடுத்து வந்த போலி சாரதி அனுமதிப் பத்திரங்கள் உள்ளிட்ட அரச ஆவணங்களை அச்சிடும் நடவடிக்கைகள் தொடர்பிலும் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த போலி சாரதி அனுமதிப் பத்திரங்கள் உள்ளிட்ட ஆவணத் தகவல்களில் உயிர்த்த ஞாயிறு தினத் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மோசடிக் கும்பலுக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் உள்ள தொடர்பு குறித்தும் சந்தேகம் எழுந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பிட்டபத்தர, நாரஹேன்பிட்டி மற்றும் வெல்லம்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த 5 சந்தேகநபர்களையும், மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனையின் பேரில் கிருலப்பனை பொலிஸ் நிலையத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் பாரிய மோசடியில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்பதால், விசேடமாக பொலிஸ் ஊடகப் பிரிவு மற்றும் பொதுமக்கள் உறவு, தொடர்பாடல் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்ன தமிழில் விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்ன, பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன ஆகியோர் ஊடக சந்திப்பில் வெளிப்படுத்திய விடயங்கள் வருமாறு:-

கடந்த மே 25 ஆம் திகதி கிருலப்பனை பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடு ஒன்றுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. தனது வங்கிக்கணக்கிலிருந்து 5 இலட்சம் ரூபா பணம் மோசடியான முறையில் பெறப்பட்டுள்ளது என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டதைப் போல் போலி அறிவித்தல் ஒன்றை அந்தச் செயலகத் தலைப்பில் இணையத்தில் வெளியிட்டும், என்டபிரைஸஸ் ஸ்ரீ லங்கா எனும் திட்டத்தின் போலி ஆவணம் ஒன்றைப் பயன்படுத்தியும் மோசடிக்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

அந்தப் போலி ஆவணங்கள் ஊடாக வெளிநாட்டில் வேலை செய்வோருக்கு அரசு குறைந்த வட்டி வீதத்தில் (2 வீதம்) இரண்டு மில்லியன் வரை கடன் வழங்குகின்றது எனப் பிரசாரம் செய்தே மோசடிக்கான ஆரம்பத்தை இட்டுள்ளனர். அதன்படி வெளிநாட்டில் வேலை செய்யும் நபர்களின் இலங்கையிலுள்ள உறவினர்கள் ஊடாக இங்குள்ள வங்கியொன்றில் புதிய கணக்கொன்று ஆரம்பிக்குமாறு சந்தேக நபர்களால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஆரம்பிக்கப்படும் கணக்கை இணையம் வாயிலாகக் கொடுக்கல் - வாங்கல் செய்யத்தக்கதாக ஆரம்பிக்கவும் எனவும் ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது.

அப்படி ஆரம்பிக்கப்பட்ட வங்கிக்கணக்குகளின் இரகசிய இலக்கம் உள்ளிட்டவற்றைப் பெற்றுக்கொள்ளும் சந்தேகநபர்கள், கடன் தொகையில் 10 வீதத்தை குறித்த கணக்கிலேயே வைக்குமாறு கூறி ஏனைய தொகையையே கடன் பெறுநருக்குப் பெற அனுமதித்துள்ளனர்.

பின்னர் தம்மிடம் உள்ள இரகசிய இலக்கங்களைப் பயன்படுத்தி அந்த 10 வீத பணத்தை இணையம் வாயிலாக தமது வேறு ஒரு கணக்குக்கு மாற்றிக் கொள்ளும் சந்தேகநபர்கள், அங்கிருந்து அதனை நான்கு தனியார் வங்கிகளிலுள்ள வேறு கணக்குகளுக்கு மாற்றியுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு முதல் இந்த நடவடிக்கைகளை சந்தேகநபர்கள் முன்னெடுத்து வந்துள்ளதுடன், விசாரணைகளில் இதுவரை வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய பிட்டபத்தர பகுதியைச் சேர்ந்த மூவர், நாரஹேன்பிட்டி, வெல்லம்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த தலா ஒவ்வொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 30, 39, 38, 46 வயதுகள் உடைய வர்களாவர்.

சந்தேகநபர்களிடம் முன்னெடுத்த விசாரணைகளில், அவர்கள் முன்னெடுத்த போலி ஆவணத் தயாரிப்பு, போலி சாரதி அனுமதிப் பத்திரத் தயாரிப்பு தொடர்பான மோசடி நடவடிக்கைகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி சந்தேகநபர்களிடமிருந்து போலி சாரதி அனுமதிப் பத்திரத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் அச்சு இயந்திரம், கணினி, லெமினேடிங் இயந்திரம், போலியாகத் தயாரிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் 61, சாரதி அனுமதிப் பத்திரம் தயாரிக்கப் பயன்படும் அட்டைகள் 925, போலிச் சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரங்கள் 5, போலி இறப்பர் முத்திரைகள் 2, வங்கி அட்டைகள் 14, நிலையான, கையடக்கத் தொலைபேசிகள் 15, சிம் அட்டைகள் 40, வங்கி பண வைப்பு பற்றுச் சீட்டுக்கள் 20, சாரதி அனுமதிப் பத்திரத் தயாரிப்புக்குப் பயன்படும் சிம் அட்டைகள், கார் மற்றும் வான் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

போலி சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பில் மேலதிக விசாரணை செய்தபோது உயிர்த்த ஞாயிறுத் தினப் பயங்கரவாத தாக்குதல்களுடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்களின் பெயர்கள் அதில் உள்ளடங்கியுள்ளமை தெரியவந்ததால், இவர்களுக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளை முன்னெடுத்த கும்பலுக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் இருந்தனவா எனச் சந்தேகம் எழுந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போலி கடன் திட்டத்தில் ஏமாற்றப்பட்ட அதிகமானோர் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்பேசும் மக்கள் எனத் தெரியவந்துள்ளது. அதனால் இவ்வாறான போலிப் பிரசாரங்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறு பொதுமக்களை வேண்டிக்கொள்கின்றோம் - என்றனர்.

## இலங்கையில் .....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது புவியியல் -கேந்திர நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் இந்திய அரசு, தமிழரின் தேசிய சுதந்திரப் போராட்டத்தைத் தவறான முறையில் கையாண்டது. இது ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட மாபெரும் வரலாற்றுத் தவறாகும்.

ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் தனது தேசிய பாதுகாப்புக்கும், புவியியல் நலன்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டதாக இந்தியா கருதியது. தனது நலன்களுக்கு விரோதமான அந்நியச் சக்திகள் இலங்கையில் ஊடுருவல் செய்திருப்பதால் தனது பாதுகாப்புச் சூழலுக்குப் பங்கம் ஏற்படலாமென இந்தியா அஞ்சியது. இலங்கையைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, அங்கு ஊடுருவி நின்ற அந்நியச் சக்திகளை வெளியேற்றி, தனது தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடனேயே இந்தியா இலங்கையில் தலையிட்டது. இனக்கொலைப் பரிமாணத்தில் மோசமடைந்த தமிழரின் இனப் பிரச்சினை இந்தியத் தலையீட்டுக்கு வழி சமைத்துக் கொடுத்தது. உலகத்தின் மனச் சாட்சியை உறுத்திய ஈழத் தமிழரின் அவல நிலை இந்தியத் தலையீட்டுக்கான தார்மீக நியாயப்பாடாகவும் அமைந்தது. தமிழரின் பிரச்சினையை முதன்மைப்படுத்தி, இலங்கை விவகாரத்தில் குறுக்கீடு செய்த இந்தியா, தமிழரின் உரிமைப் போராட்டத்தை பயன்படுத்தித் தனது தந்திரோபாய நோக்கை அடைந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்தியத் தேசிய, புவியியல் நலன்களைப் பேணுவதாக அமைந்தது. ஆனால் இந்த ஒப்பந்தம் தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையவில்லை. மாறாக, அது தீங்கு விளைவிப்பதாக அமைந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தமானது இலங்கையின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் முன்னுரிமை கொடுப்பதுடன் அவற்றிற்கு பாதுகாப்பு உத்தரவாதமும் அளிக்கிறது. இந்த ஒப்பந்தம் சிறீலங்காவின் இறுக்கமான, நெகிழ்வற்ற ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைகிறது. இதனால் தமிழீழ மக்கள் தமது வரலாற்றுத் தாயகத்தில் முழுமையான அதிகாரமுடைய சுயாட்சி அரசை நிறுவக்கூடிய இடைவெளியையும் இது மூடிவிட்டது.

நீதி வேண்டி, அரசியல் உரிமைகள் வேண்டி , மனித சுதந்திரங்கள் வேண்டி, இரத்தம் சிந்தி நிகழ்த்தப்பட்ட தமிழரின் தேசியப் போராட்டத்தினது ஆழமான அறநெறிப் பண்பியல்புகளை இந்தியத் தலைமைப்பீடு முற்றாகப் புறக்கணித்தது. ஒடுக்கப்பட்ட ஒரு மக்கள் இனத்தின் உணர்வலைகளை, தணியாத தியாகச் சுடர்விடும் அம்மக்களின் சுதந்திர வேட்கையை இந்தியா அலட்சியம் செய்தது. மனிதாபிமானக் குறிக்கோளுடன் எமது பிரச்சினையில் தலையிட்டதாகக் கூறிய பாரத தேசம், எமது மக்களுக்கு நியாயமும் நீதியும் வழங்க வேண்டிய தார்மீகக் கடப்பாட்டிலிருந்து வழுவியது.

இலங்கையில் இந்தியத் தலையீட்டின் அத்தியாயம் முடிவுற்று பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆயினும் தமிழீழ மக்களின் தேசியப் போராட்டம் தொடர்கிறது. புதிய நெருக்கடிகளையும், புதிய சவால்களையும், புதிய திருப்பங்களையும் சந்தித்தவாறு தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர்கிறது

காலைக்கதிர் Kalaikkathir

# ‘என் கனவு யாழ்’ தேர்தல் வாக்குறுதி அல்ல அது ஒரு திட்டம்!

## சுதந்திரக்கட்சியின் பெண் வேட்பாளர் பவதாரணி சொல்கிறார்

**தேர்தல் வியூகம்**

செவ்வி கண்டவர்கள் :-
பிரபாகரன் டிலக்ஸன்,
இராமச்சந்திரன் கலையமுதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதனின் என் கனவு யாழ் என்பது தேர்தல் வாக்குறுதி அல்ல. அது ஒரு திட்டம். மக்களின் வாழ்வாதரத்தின் ஊடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கம் என்று ரீ சுதந்திரக்கட்சியின் பெண் வேட்பாளர் பவதாரணி இராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மும்முரமான தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு மத்தியிலும், தேர்தல் பணிகள் பற்றி காலைக்கதிர் இதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் வழங்கிய செவ்வி வருமாறு:-

**கேள்வி:- நீங்கள் பெண்ணாக தேர்தலில் போட்டியிடுவதில் எதிர்கொண்ட சவால்?**

பதில்:- நான் எதிர்கொண்ட சவால் என்பதை விட சாவல்களை எதிர் கொண்டதால் தான் இந்த இடத்திற்கு வந்துள்ளேன். ஒரு பெண்ணை பொறுத்தவரை அரசியல் மட்டுமல்ல வீட்டில் இருந்து வாசல் தாண்டுவதே பெரியதொரு சவால் ஆகும். பெண் என்றால் சத்தத்தை குறைத்து கதை, பெரிதாக முயற்சி செய்யாதே என கூறும் சமூகம், பெண் ஆளுமைகளை ஏற்றுக்கொள்வதில்லை. பெண் என்றால் பாவம் என நினைக்கின்றனர்.
இது எனக்கு மட்டுமல்ல அரசியலில் உள்ள அத்தனை பேருக்கும் சவால்தான்.

**கேள்வி:- பெண்களுக்கு எதிரான சவால்களை எவ்வாறு வெற்றி கொள்ளலாம்?**

பதில்:- இந்த நாட்டில் 53 வீதம் பெண்கள். ஆனால் நாட்டை பிரதிபலிக்கும் நாடாளுமன்றத்துக்கு எத்தனை பெண்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்? பெண்களே பெண்களுக்கு ஆதரவு வழங்குவதில்லை. பல சமயங்களில் பெண்களின் வாக்குகளைத் தீர்மானிக்கும் சக்தியாக ஆண்களே காணப்படுகின்றனர். ஆகவே இம்முறை பெண்கள் கட்சி பேதங்களை மறந்து, ஒரு பெண்ணுக்கு வாக்களிக்க வேண்டும்.

**கேள்வி:- உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கென 25 வீத ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நாடாளுமன்றிலோ, மாகாண சபையிலோ பெண்களுக்கென்று ஒதுக்கீடு எதுவும் இல்லையே?**

பதில்:- குறிப்பாக கடந்த உள்ளூராட்சி சபைகளில் 12 வீதமானோர் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட, ஏனைய 13 வீதமானோரே நியமனம் மூலம் பிரதிநிதிகளாகச் சென்றுள்ளனர். இனிவரும் காலங்களில் மக்களே 25 வீதத்திற்கும் மேலாக பெண் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நிலமை உருவாகும்.

> காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை பெண்களுக்கு விசேட ஒதுக்கீடு என்பது தேவையற்ற ஒன்றே. பெண்களை வீட்டிற்கு வெளியே வேலை செய்யப் பலர் அனுமதிப்பதில்லை. ஆனால் பல பெண்கள் வீட்டு வேலையையும், வெளிவேலையை ஒரே நேரத்தில் செய்கின்றனர்.



**கேள்வி:- பெண்கள் விடயம் தொடர்பில் அதிகம் கரிசனை கொண்டுள்ள உங்களுக்கு மூன்றாம் பாலினத்தவர்கள் தொடர்பில் என்ன நிலைப்பாடு இருக்கிறது?**

பதில்:- மூன்றாம் பாலினத்தவர்களை எப்போதுமே எமது சமுதாயம் சாபமாகவும் கேலிப்பொருளாகவும் பார்க்கின்ற நிலை உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். மூன்றாம் பாலினத்தவர்களிடையே எம்மைப் போன்ற -எம்மை விடவும் - திறமையானவர்கள் உள்ளனர். ஆகவே அவர்களுக்குரிய கௌரவம் அளிக்கப்பட வேண்டும்.

**கேள்வி:- நீங்கள் இம்முறை நாடாளுமன்றுக்கு தெரிவானால் எத்தகைய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பீர்கள்?**

பதில்:- நான் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானால் நாட்டையே மாற்றுவேன் என்று கூறுவது நல்ல நகைச்சுவையாகவே இருக்கும். ஆனால் என்னால் முடிந்த அளவு விடயங்களை செய்வேன். பல வேலைத் திட்டங்கள் பூரணப்படுத்தப்படாமலேயே காணப்படுகின்றன. இந்த நிலையில் அவற்றை செய்து முடிப்பது அவசியம். எங்களுடைய முதன்மை வேட்பாளரின் ‘என் கனவு யாழ்’ என்பது தேர்தல் வாக்குறுதி அல்ல. அது ஒரு திட்டம். கல்வி,வீடு,உணவு, நீர், மின்சாரம்,வீதி போன்ற அடிப்படை விடயங்களுக்கு தீர்வு காண வேண்டும். அடிப்படை தேவைகள் என்பது அடுத்த ஐந்து வருடங்களுக்குப் பின் இருக்க கூடாது என்பது என்னுடைய இலக்கு.

**கேள்வி:-காணாமலாக்கப்பட்டவர்கள் விடயம் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு?**

பதில்- காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. குறைந்தது ஒரு குடும்பத்திற்கு 20 இலட்சம் ரூபா பணமாக வழங்கப்பட வேண்டும். அவர்களுடைய குடும்ப நிலை, வருமானம் என்பவற்றை கருத்திற் கொண்டு இந்த உதவி அவசியம் செய்யப்பட வேண்டும். அவர்களுடைய குடும்பத்தினருடைய தொழில் முயற்சிக்கு ஏதாவது வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும்.

> இந்த நாட்டில் 53 வீதம் பெண்கள். ஆனால் நாட்டை பிரதிபலிக்கும் நாடாளுமன்றத்துக்கு எத்தனை பெண்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்? பெண்களே பெண்களுக்கு ஆதரவு வழங்குவதில்லை. பல சமயங்களில் பெண்களின் வாக்குகளைத் தீர்மானிக்கும் சக்தியாக ஆண்களே காணப்படுகின்றனர்.

**கேள்வி:- உங்களுடைய கட்சி முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் ஒருபோதும் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்லமாட்டேன் எனத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் உங்களுக்கு தேசிய பட்டியல் கிடைத்தால் நாடாளுமன்றம் செல்வீர்களா?**

பதில்:- தேசிய பட்டியல் தெரிவு என்பது கட்சி ரீதியான ஓர் விடயம். நான் ஒரு ஆளுமையானவள் என கட்சி தீர்மானித்தால் நிச்சயம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்துவேன். ஆனால் எங்களுடைய முதன்மை வேட்பாளரைப் பொறுத்தவரை அவர் செல்லுமிடமெல்லாம் மக்கள் அமோக வரவேற்பளிக்கின்றனர். அவருடைய வெற்றி என்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுவிட்டது.

# வன்னியில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைச் சூறையாட ‘மொட்டு’ சதி

## ரிஷாத் பகிரங்கக் குற்றச்சாட்டு



வன்னி மாவட்டத்தில் வாழும் சிறுபான்மை மக்களான தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக, அதிகாரப் பலத்தையும் பண பலத்தையும் பிரயோகிக்கும் புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாகியுள்ளது.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, மாணிக்கர் இலுப்பைக்குளத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னி மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு மொட்டுக் கட்சியினரின் தேர்தல் அடாவடித்தனங்களும் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. வெளிமாவட்டத்திலிருந்து வேட்பாளர்களை களமிறக்கியதால் வந்த வினையே இது. மக்களின் ஏழ்மையையும் அப்பாவித்தனத்தையும் தேர்தல் மூலதனமாக்கி, பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இருபது வருடங்களாக நாம் தேர்தல் களத்தில் நிற்கின்றோம். ஆளுங்கட்சியில் அதிகாரமுள்ள அமைச்சர்களாக இருந்த வேளையிலும் தேர்தலில் போட்டியிட்டோம். எனினும், அந்தக் காலங்களில் ஜனநாயகத்தை மதித்து, எதிர்க்கட்சிகளின் பரப்புரைகளுக்கு இடமளித்து, அவர்கள் சுயாதீனமாக தேர்தல்களில் ஈடுபட முன்னுதாரணமாக இருந்திருக்கின்றோம்.

ஆனால், இம்முறை வன்னி மாவட்டத்தின் தேர்தல் களம் மாற்றமாகியுள்ளது. கடந்த காலங்களில், வேறு மாவட்டதிலேதான் இவ்வாறானவர்களின் அட்டகாசம் இருந்தது. ஆனால், இப்போது வன்னியில் புதிதாகத் தலைவிரித்தாடுகின்றது. அரச வளங்களையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி, மனம்போன போக்கில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல் கைகட்டி நிற்கின்றனர். தேர்தல்கள் ஆணையகம் கூட இதனைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றது.

எதிர்க்கட்சிகளின் பரப்புரை நடவடிக்கைகளுக்குப் பல்வேறு தடைகள் போடப்படுகின்றன. கெடுபிடிகள் இடம்பெறுவதோடு, சோதனைச் சாவடிகளில் பலமுறை இறக்கியேற்றலும் இருக்கின்றது. ‘ஆளுங்கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிகளுக்கு இன்னுமொரு நீதி’ என்ற பாகுபாடு காட்டப்படுகின்றது. சுயாதீனமாக தேர்தல் நடவடிக்கைளில் ஈடுபட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நேற்று இந்தப் பிராந்தியத்தின் ஊரோன்றுக்குள், அனுமதி பெறாமல் புகுந்த சிலர், அடாவடித்தனங்களில் ஈடுபட்டதனால், ஊர்வாசிகள் பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையானது வேதனையளிக்கின்றது.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான அமைப்பு (கபே அமைப்பு) போன்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இந்த நிலையைக் கவனத்தில்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன் - என்றார்.

# தேர்தல் தொடர்பில் இதுவரை 5,400 முறைப்பாடுகள் பதிவு

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் தொடர்பாக இதுவரையில் மொத்தமாக 5 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 1,020 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 4 ஆயிரத்து 380 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், கடந்த 26ஆம் திகதி மாலை 4 மணி முதல் மறுநாள் 27ஆம் திகதி மாலை 4 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மட்டும் 164 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 09 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 155 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இதேவேளை, வன்முறைகள் தொடர்பில் இதுவரையில் எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை எனவும், தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# கிளிநொச்சியில் எழுமாற்றாக 100 பேரிடம் பி.சி.ஆர். சோதனை

## எவருக்கும் கொரோனா தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் எழுமாறாக 100 பேரின் உயிரியல் மாதிரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் எவருக்கும் கோரோனா தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய 9 மாகாணங்களின் சுகாதாரத் திணைக்களங்களால் அடுத்த ஒரு வருடத்துக்கு எழுமாற்றாக தெரிவு செய்யப்படும் நபர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி கடந்த புதன்கிழமை நாச்சிக்குடா பகுதியில் 20 பேரிடமும் மறுநாள் வியாழக்கிழமை கிளிநொச்சி நகரில் 50 பேரிடமும் தொடர்ந்து பளை பகுதியில் 30 பேரிடமும் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு கோரோனா தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

தென்பகுதிக்குச் சென்று வந்தவர்கள், பாரவூர்திச் சாரதிகள், பொலிஸார், முதியோர் இல்லத்தில் தங்கியிருப்போர், விடுதிகளில் தங்கியிருப்போர் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்டோரிடமே இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# ஆறு மாவட்டங்களுக்கு டெங்கு நோய் அபாயம்



தற்போது நிலவும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து, பல மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளன என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் இவ்வருடத்தின் முதல் காலாண்டில் இருந்ததை விட, இரண்டாவது காலாண்டில் குடம்பிகளின் இனப்பெருக்கம் பாரியளவில் அதிகரித்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

கொழும்பு மாநகர சபை பிரிவுக்குட்பட்ட நிறுவனங்களில், 50 வீதத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்களில் டெங்கு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உரிய முறையில் அவசியமான நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால், குறித்த அபாயமானது மழையுடன் மேலும் அதிகரிக்கும்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் தற்போது டெங்கு நோய் அதிக ஆபத்துள்ள மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த ஆபத்து நிலைமையானது, தொற்று நோய்க்கு வழிவகுக்காமல் தடுக்க, குறித்த பிரதேசங்களில் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கூட்டமைப்பு வருவதையே மொட்டுக் கட்சி விரும்புகிறதாம்!

## இப்படிக் கூறுகிறார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சிறீகாந்தா

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம்,ஜூலை 29

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மீண்டும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக வரவேண்டும் என மொட்டுக் கட்சியினர் விரும்புகின்றனர் என தமிழ் தேசியக் கட்சியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளருமான சிறீகாந்தா தெரிவித்தார்

குருகரில் நேற்று இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களைப் பொறுத்தவரை எதிர்வரும் தேர்தல் குருதேத்திர களமாகும். குருதேத்திர யுத்தத்தில் தர்மத்தினை நிலைநாட்டுவதற்கு கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் யுத்தம் இடம்பெற்றது. அது போல் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கும் கடந்த 11 வருடங்களாக தமிழர் அரசியல் தலைமையினை கொண்டிருக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையில் அரசியல் யுத்தம் இடம்பெறுகிறது.

தீர்க்கமான முடிவினை தரக்கூடிய இந்த அரசியல் யுத்தத்தில் ஓரமாக ஏனைய கட்சியினர் உள்ளனர். ஏனைய கட்சியினர் இந்தப் போராட்டத்தில் இடம்பெறப் போவதில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தன்னை நம்பிய தமிழ் மக்களின் நம்பிக்கையை காப்பாற்றாது துரோகமிழைத்துவிட்டது. அதனாலேயே நாம் ஜனநாயக போர்க்களத்தில் கூட்டமைப்பினரைச் சந்திக்கவுள்ளோம்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் அக்கறை செலுத்துகின்ற பல நாடுகள் இந்தப் பொதுத் தேர்தலை உன்னிப்பாக அவதானிக்கின்றன. தமிழர்கள் கள் சரியான தரப்பினை தீர்மானிக்க வேண்டும். ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் ஒத்துழைப்பு அரசியலை மேற்கொண்டுவருகின்றனர். சுதந்திரத்தினை நாடி நிற்கின்ற எம் மக்கள் இவர்களை நிராகரிக்க வேண்டும். நானும் டக்ளஸ் தேவானந்தாவும் நண்பர்கள். ஆனால் நட்பைவிட தமிழ் மக்களின் நலனே முக்கியம்.

சமீபத்தில் அரசியலுக்கு வந்த பலர் ஸ்ரீலங்கா சுகந்திரக் கட்சியினூடாக போட்டியிடுகின்றனர். இவர்கள் பணக்காரர்களாக உள்ளனர். அவர்களின் பணப் பின்புலம் பற்றி அறிய விரும்பவில்லை. அவர்களில் அங்கஜன் இராமநாதனும் ஒருவராவார். அவரை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்பதற்காக தேர்தல்




சட்டங்களை மீறி சுதந்திரக் கட்சியினர் செயற்படுகின்றனர். யாழ் மாவட்டச் செயலகத்தில் உள்ள உயரதிகாரிகள் கூட நேரடியாகவும் மறைமுகமாகவும் அங்கஜனுக்கு உதவிபுரிகின்றனர். இவர்களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும்.

இவர்களைப் போல் சுயேச்சைக் குழுக்களில் பலர் போட்டியிடுகின்றனர். தமிழ் மக்கள் வாக்குகளை திட்டமிட்டு சிதறடிப்பதற்கு என இவர்கள் களமிறங்கியுள்ளனர். சுயேச்சைக் குழுக்களையும் நிராகரிக்க வேண்டும்.

எங்களோடு சேர்ந்திருக்கவேண்டிய கஜேந்திரகுமார் அணி தனியாக நிற்கின்றது. தனியாக நிற்பதன் சோகத்தை தேர்தல் முடிவுகளின் பின்னர் உணர்ந்து கொள்வார்கள். எமது கட்சித் தலைவர் கூறுவது போல அவர்கள் இன்னமும் வயதிற்கு வரவில்லை. அவர்களைப் பற்றி நாம் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மீண்டும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக வரவேண்டும் என மொட்டுக் கட்சியினர் விரும்புகின்றனர். நாடாளுமன்றில் தாம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெற்றுவிடுவோம் எனவும், வடக்கு கிழக்கில் கூட்டமைப்பு வெற்றிபெற்ற பின்னர் அவர்களுடன் பேசுவோம் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதான யாழில் கூறினார். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக யார் வர வேண்டும் என சிங்கள தேசம் விரும்புகின்றது என்பதனை தமிழ் மக்கள் உணர வேண்டும்.

அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிக்குரிய இளவரசர் கூறிய கருத்திற்குத் தேர்தல் காலம் என்பதால் ஏனையோர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். குட்டித் தலைவர்களும் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். ஆனால் கூட்டமைப்பினரின் ஒட்டுமொத்த உண்மை மனநிலையினையே முடிக்குரிய இளவரசர் வெளிப்படுப்படுத்தியிருக்கிறார். அந்தவகையில் உண்மையைக்கூறிய அவரைப்பாராட்ட வேண்டும்.

கூட்டமைப்பினர் சொகுசு பங்களாக்களில் வாழும் சொகுசு வாழ்க்கைக்கு ஏங்குகின்றனர். தமிழ் மக்களுக்காக போராடவில்லை. மக்கள் இவர்களை நிராகரிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் குரல் எப்போதும் ஒலிக்கும். எங்கள் குரல் அடங்குகிறது என்றால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேறிவிட்டன என்று அர்தமாகும். – எனக் குறிப்பிட்டார்.


## வாக்களிப்பது உங்கள் உரிமையும் பொறுப்புமாகும்

**கொரோனா (Covid 19) அச்சமின்றி பாதுகாப்போடு வாக்களிப்போம்.**

### வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள்




☆ கொரோனா (கொவிட் 19) நோய் பரவலை தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள்.
☆ நிலைய வளாகம் தொற்று நீக்கம்.
☆ கைகளை கழுவுதல்.
☆ சமூக இடைவெளி பேணுதல்.
☆ தொடுகையின்றி ஆவணங்களை பரிசோதித்தல்.
☆ அழியாத மை பூசுவதற்கு தனித்தனியாக தூரிகை பயன்படுத்தல்.
☆ வாக்களிக்க முன்னரும் பின்னரும் கைகளைத் தொற்று நீக்குதல்.
☆ வாக்களிப்பு சிற்றறையை அடிக்கடி தொற்று நீக்குதல்.
☆ சொந்தப் பேனாவை எடுத்து வந்து வாக்களித்தல்/ தொற்று நீக்கப்பட்ட பேனாவைப் பயன்படுத்தல்.

### 2020 ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி

* நேர காலத்துடன் சென்று வாக்கை அளியுங்கள்.
* கட்டாயமாக முகக்கவசம் அணிந்து செல்லுங்கள்.
* சமூக இடைவெளியைப் பேணுங்கள்.
* ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டை ஒன்றினைக் கட்டாயமாக எடுத்துச் செல்லுங்கள்.
* வாக்காளர் அட்டையை எடுத்துச் செல்வது வாக்களிப்பினை இலகுவாக்கும்.
* கறுப்பு/நீல நிற பேனா ஒன்றினை எடுத்துச் செல்லுங்கள்.
* தேவையற்ற பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டாம்.

**‘வாக்குரிமையை பாதுகாப்போம்
பாதுகாப்பாக வாக்களிப்போம்’**

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.


# கேள்வி கேட்டமையினால் கூட்டத்தில் குழப்பம் உதவிகள் கிடைக்கவில்லை என்று முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 29

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் வேட்பாளர்களிடம் கேள்வி கேட்டுஜ் கூட்டத்தைக் குழப்பியதனால் தமக்கு வர வேண்டிய உதவிகள் கிடைக்கவில்லை. எனவே கேள்வி கேட்டுக் கூட்டத்தைக் குழப்பியவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என விசித்திரமான முறையில் கிளிநொச்சி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்துக்கு உதவிகள் பெறும் நோக்கில் அமைப்பொன்றினால் கடந்த 18ஆம் திகதி சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியினரை அழைத்து வந்து கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட வேட்பாளர்களிடம், அதே பகுதியை சேர்ந்த ஒருவர் கேள்விகளை கேட்டதனால், தேர்தல் கூட்டத்தை இடையில் கைவிட்டுவிட்டு, எதுவித உதவிகளையும் செய்யாமல் வந்தவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

இதனால் தமக்கு கிடைக்கவிருந்த உதவி தடைப்பட்டு விட்டது எனவும், கூட்டத்தை இடைநிறுத்தி எமக்குக் கிடைக்கவிருந்த உதவிக்குத் தடைபோட்டவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்து கிளிநொச்சி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அமைப்பொன்றின் கடிதத் தலைப்பில் முறையிடப்பட்டுள்ளது.

# தேர்தல் வெற்றியின் பின் மூன்றிலிரண்டு நிச்சயம்

## நிலைப்பாட்டை மாற்றுகின்றது 'மொட்டு'

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியின் பின்னர் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரசை அமைக்க முடியும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அம்பாந்தோட்ட மாவட்ட வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெரண தொலைக்காட்சியில் ஒளிபரப்பான தெரண 360 என்ற நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த அரசு சில கட்சிகளை குத்தகைக்கு வாங்கியே மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டது.

'சௌபாக்கியமான இலக்கு' என்ற விஞ்ஞாபனத்தின் முக்கிய விடயம் மக்களை மையப்படுத்திய யாப்பை உருவாக்குவதாகும்.

மக்களின் கருத்துக்களைப் பெற்றே அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்றார்.

# ரிஷாத்துக்கு எதிரான விசாரணை தொடரும்

## பொலிஸ் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் குறித்து கடந்த வருடம் ஜீன் 20ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து பெறப்பட்ட அறிக்கை செல்லுபடியாகாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.



அந்த அறிக்கையில் ரிஷாத் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவத்தில் சந்தேகநபர் அல்லர் என்றும், இதனால் அவருக்கு எதிராக எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது எனவும் பொலிஸ் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் -

குற்றப் புலனாய்வுத் துறையுடன் இணைக்கப்பட்டிருந்த மூத்த பொலிஸ் அதிகாரியிடம் இருந்து பொலிஸ்மா அதிபருக்கு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையின் அடிப்படையில், பொலிஸ்மா அதிபர் அதே நாள் கடந்த ஆண்டு ஜீன் 20ஆம் திகதியன்று நாடாளுமன்றப் பொதுச் செயலாளருக்கு கடிதம் எழுதினார்.

அந்தக் காலகட்டத்தில் வெளிவந்த தகவல்களின்படி, ரிஷாத் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுவெடிப்பில் சந்தேகநபர் அல்லர். எனவே, அவருக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த அறிக்கை ஒரு வருடத்துக்கு முன்னர் வெளியிடப்பட்டது. ஜீன் 20ஆம் திகதிக்குப் பின்பும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனவே, இந்த அறிக்கை செல்லுபடியாகாது. எனவே, ரிஷாத் பதியுதீன் மற்றும் பிறருக்கு எதிரான விசாரணைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். - என்றார்.

# லிந்துலை தொழிலாளர் குடியிருப்பில் பத்து வீடுகள் திடீரென எரிந்து நாசம்!

லிந்துலை ஆகரகந்தை தோட்டத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன. இதனால் 10 குடும்பங்களை சேர்ந்த 75 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டமையை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனையடுத்து அயலவர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். சுமார் ஒரு மணித்தியாலயத்தின் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் சில வீடுகளில் இருந்த சில பொருள்களை மாத்திரம் அவர்களால் தீக்கு இரையாகாமல் வெளியில் கொண்டு வர முடிந்துள்ளது.

எனினும், சில வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.

இந்தத் தீ விபத்தினால் லயன் தொகுதியில் அமைந்திருந்த 10 வீடுகள் சேதமடைந்தன. இந்த வீடுகளில் குடியிருந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் தற்காலிகமாக தோட்ட கலாச்சார மண்டபத்திலும், தோட்ட முன்பள்ளி பாடசாலையிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம், அக்கரப்பத்தனை பிரதேச சபை ஆகியன ஊடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் லிந்துலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

# சிறைக்குள் பொருள்களை வீசும் பிரதான சந்தேகநபர் சிக்கினார்

வெலிக்கடை சிறைச்சாலையினுள் ஹெரோயின் மற்றும் தொலைபேசி வீச முயற்சித்த குற்றச்சாட்டில் பிரதான சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீவலி பிரதேசத்தில் வைத்து இந்தச் சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பைத் தொடர்ந்து, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொரளை, சீவலிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு, சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் ஹெரோயின், 03 கையடக்கத் தொலைபேசிகள், 06 கையடக்கத் தொலைபேசி பற்றிகள், 110 கிராம் புகையிலை, 400 கிராம் தேயிலை, 01 தைலம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# கோப்பாய் இளைஞன் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஜூலை 29

போலி ஆவணங்களின் மூலம், ஐரோப்பாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே விமான நிலைய குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று அதிகாலை 3.15 மணியளவில் டோஹா நோக்கி புறப்படவிருந்த விமானத்தில் பயணிக்க வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8 வயதுச் சிறுவனுக்கு கசிப்புப் பருக்கிய பின் தலைமறைவாகிய தாய் மாமன் கைதானார்

எட்டு வயது நிரம்பிய சிறுவனுக்கு கசிப்பைப் பருக்கிவிட்டு, தலை மறைவாகியிருந்த சிறுவனின் தாய் மாமன் கைது செய்யப்பட்டு, பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டப் போது, நீதிபதி கீர்த்தி கும்புறுஹேன, அந்நபரை நாளை 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

ஹல்துமுள்ளைப் பகுதியின் நீட்வூட் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த லெட்சுமன் சிவகுமார் என்ற 42 வயது நிரம்பிய நபரே, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவராவார்.

இந் நபரின் சகோதரியின் மகனான எட்டு வயது நிரம்பிய சிறுவனுக்கு இந்நபர் ஆகக் கூடுதலான கசிப்பினைப் பருக்கியமையினால், அச் சிறுவன் ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றான்.

இச் சிறுவனின் தாய் மத்திய கிழக்கு நாடொன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாக இருந்த நிலையில், அவரைப் பற்றிய எவ்வித தகவலும் இல்லாதுள்ளது. சிறுவனின் தகப்பனும் மதுவிற்கு அடிமையாகிய நிலையில் இருந்து வருவதும், குறிப்பிடத்தக்கது. சிறுவனுக்கு சிறுவனின் தாய் மாமனான நபர், கசிப்பினை ஆகக் கூடுதலாகப் பருக்கியமையும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

ஹல்துமுள்ளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசன்ன த சில்வா, மேற்படி சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்

- உதவி ஆசிரியர்
- ஒப்பு நோக்கர்கள்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## தமிழ் தேசியத்தின் காவலர்கள்...!

1. தேர்தல் பிரசாரங்களில் புலி வேசம் போட்டு, வீர வசனங்களால் மக்களை கொதி நிலையில் வைத்து வாக்கு வேட்டை நடாத்தி, நாடாளுமன்றத்தில் பூனை போல் நடித்து வரப்பிரசாதங்கள் என்ற கருவாட்டைக் கடித்துவிட்டு, அபிவிருத்தி என்ற பாலுக்கு காவலாக இருக்கும் திருட்டுப் பூனைகளான தமிழ் அரசியல்வாதிகளை இந்தத் தேர்தலில் வீட்டுக்கு அனுப்புங்கள்!
2. முதியோர் இல்லத்துக்கு அனுப்ப வேண்டியவர்களை நாம் தவறுதலாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பி அங்கே விவாத நேரங்களில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவர்களை இந்த நாடே நன்கு அறியும். இந்தத் தேர்தலில் அவர்களை எங்கே அனுப்பவேண்டும் என்பதை நீங்கள் தெளிவாகச் சிந்தியுங்கள்!
3. தந்தையின் செல்வாக்கால் இன்றுவரை நாடாளுமன்ற உறுப்பினராக ஆசனத்தை சூடாக்கிக் கொண்டிருப்பவர் கடந்த காலத்தில் ஒரு நாளேனும் எமது மக்களின் பிரச்சினைகள் பற்றி நாடாளுமன்றத்தில் வாயைத் திறக்காமல், தூங்கிக் கொண்டிருந்ததை நீங்கள் அறிவீர்களா?
4. இரு தேசங்கள் ஒரு நாடு என்ற கொள்கையை முன்வைத்து கூவித்திரியும் அரசியல் வாதிக்கு முழங்காவில் எந்தத் தேசத்தில் இருக்கின்றது என்ற பிரதேச அறிவு இருக்கின்றதா?
5. தமது இருப்பைக் காப்பாற்றிக்கொள்வதற்கு கள்ள வாக்கு போட்டமையை பெருமையாகப் பேசிய முட்டாள்த்தன மான அரசியல்வாதியை இந்த நாடே அறியும்!
6. ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை தமிழ் மக்களுக்கு எதிரியாய் பயம் காட்டும் சந்தர்ப்பவாத ஊடக அரசியல்வாதி சந்தர்ப்பம் கிடைத்தால் தன் குடும்பத்து பிறந்தநாள் விழாவுக்கு ஜனாதிபதியை அழைத்து கேக் வெட்டி மாம்பழமும் கொடுக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை!
7. கூட்டணியின் வீட்டின் கதவுகள் ஜன்னல்கள் சகலதும் உட்கட்சிப் பூசலால் அகற்றப்பட்டு அலங்கோலமாய் காட்சி அளிக்கிறது!
8. தன் பெயரையே எழுதிவைத்து படிக்கும் நீதியரசர் அரசியல் சாக்கடையில் மீன் பிடிப்பிடிப்பதற்கா முயற்சிக்கிறார்?
9. வடமாகாண பத்திரிகைகளில் அன்றாடம் காணும் போதைப்பொருள்கள், கஞ்சா, கொலை, கொள்ளை போன்ற செய்தி களை எம் தமிழ் அரசியல்வாதிகள் ஏன் கண்டுகொள்ளவில்லை?
10. அத்தியாவசியத் தேவைகளையும் அபிவிருத்திகளையும் புறக்கணித்து, அரசியல் தீர்வுதான் முக்கியம் என்று காலம் காலமாய் எங்களை ஏமாற்றியவர்களை குறைகூறுவதைவிட ஏமாற்றப்படும் அளவுக்கு நாங்கள் முட்டாள்களாக இருந்துவிட்டோம் என்பதை உணர்ந்து, புதிய மாற்றத்திற்காக வாக்குப் புரட்சி செய்வீர்களா?

**கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின வெற்றி இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எமது மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கும் உரிமைகளுக்கும் வித்திடுங்கள்.**



**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**



**'உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!'**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்

## (விண்ணன்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinan05

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2020 இல் வெளியிடப்பெற்றது.